செய்தி வெளியீடு எண்:1008 நாள்:20.11.2008

பத்திரிக்கை செய்தி

தேசீய விதைக் கழகம் மூலம் எம்.டி.யூ 1010 நெல் ரக விதைகள் திருவாரூர் மாவட்டத்தில் 102 மெ.டன்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 17 மெ.டன்களும் கொள்முதல் செய்யப்பட்டு வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இந்த ரகத்தின் வயது 120 நாட்களாகும். நெல் சாகுபடியில் செம்மை நெல் தொழில் நுட்ப சாகுபடி முறையை கடைபிடிக்கும் போது 14 நாள் வயதுடைய நாற்றுகளை நடவும், சாதாரண முறையில் நடவு செய்ய சுமார் 20 வயதுடைய நாற்றுகளை நடவும் வேளாண் துறை பரிந்துரை செய்கிறது.

எம்டியூ 1010 நெல் விதைகளை வாங்கி வயது முதிர்ந்த 35 முதல் 40 நாட்கள் வயதான நாற்றுக்களை நட்ட விவசாயிகள், தங்கள் வயல்களில் நட்ட உடனே கதிர் வந்து விட்டதாக புகார் தெரிவித்துள்ளனர். இளம் நாற்றுக்கள் நட்ட பகுதிகளில் இப்பயிர் நல்ல நிலையில் உள்ளது. புகார் பெறப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த வேளாண்மை துறையினர் மற்றும் வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் வயது முதிர்ந்த நாற்றுக்களை நட்டதாலும், இவ்வயல்களில் போதிய நீர் இல்லாததாலும், பயிர்களுக்கு போதிய உரச் சத்துக்கள் வழங்காததுமே இப்பயிர்களில் முன்னதாகவே கதிர் வந்ததற்கு காரணம் என கருத்து தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் கூடுதலாக 25 கிலோ யூரியா, 16 கிலோ பொட்டாஷ், 5 கிலோ வேப்பம்புண்ணாக்கு மற்றும் 10 கிலோ ஜிப்சம் இடுவதன் மூலம் தூர் அதிகமாக பிடித்து விளைச்சல் குறையாமல் பயிரை பாதுகாக்க முடியும் என பரிந்துரை செய்துள்ளனர். வேளாண் துறை அலுவலர்கள் இப்பகுதி விவசாயிகளின் நிலங்களை பார்வையிட்டு பரிந்துரைபடி கூடுதல் உரமிட விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**வெளியீடு:**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.